## 4.28 பூமாலை வணிக வளாகம் பெயரை "பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்ட வளாகம்" எனப் பெயர் மாற்றம்

ஊரக வளர்ச்சி (எஸ்.ஜி.எஸ். ஒய்) துறை

அரசாணை (நிலை) எண். 175 நாள்: 27.07.2001

படிக்க :

1. அரசாணை (நிலை) எண். 137. ஊரக வளர்ச்சி(எஸ்.ஜி.எஸ். ஒய்) துறை நாள் 25.5.2000
2. அரசாணை (நிலை) எண். 192. ஊரக வளர்ச்சி(எஸ்.ஜி.எஸ். ஒய்) துறை நாள் 19.7.2000
3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 16.7.2001 அன்று ஊரக வளர்ச்சித்துறைத் திட்டங்கள் தொடர்பாக நடந்த ஆய்வுக் கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்பு

**ஆணை**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 16.7.2001 அன்று ஊரக வளர்ச்சித் துறைத் திட்டங்கள் தொடர்பாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பொன்விழா சுய வேலை வாய்ப்புத் சிறப்புத் திட்டம் 'பூமாலை' என பெயரிடப்பட்ட வணிக வளாகத்தின் பெயரை மாற்றி அத்திட்டத்தின் உண்மை பெயரான பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத்திட்ட வளாகம் என்ற பெயராக மாற்றி அமைக்க முடிவெடுக்கப்பட்டது.

2. அதற்கிணங்க 'பூமாலை' எனப் பெயரிடப்பட்ட வணிக வளாகத்தின் பெயரை மாற்றி அத்திட்டத்தின் உண்மைப் பெயரான 'பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்ட விற்பனை வளாகம்' எனப் பெயரிட்டு அரசு ஆணை வெளியிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**என். கோவிந்தன்**
அரசு செயலாளர்